# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM ජේසියම්



சிறந்ததில் மிகச்சிறந்தது

OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com

CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 61 | 20.05.2023 (சனிக்கிழமை) | வைகாசி மாதம் | பக்கங்கள் 6 | ஊக்குவிப்பு : ரூ.30.00




பக்கம் 5

## 14 ஆண்டுகளுக்கு முன்பு உயிரில் பாதியை இழந்து அழுது ஆற்பரித்து

### அடங்க முடியாமல் தவித்து கொண்டிருந்த சிறுமி நான்!!!

### தளபதி சொர்ணத்தின் மகள் முகிலினி ஆதங்கம்

எமது தாயகத்தின் இருப்பையும் எமது மக்களின் அரசியல் உரிமைகளையும் உறுதிபடுத்தி இலங்கையின் இன அழிப்பிலிருந்து சிறுவர்கள், பெண்கள் உட்பட அனைவரையும் பாதுகாப்பது உலகின் கடமை என தளபதி சொர்ணத்தின் மகள் முகிலினி தெரிவித்துள்ளார்.

## இலஞ்ச ஊழல் பெருச்சாளியை வடக்கு ஆளுனராக்க வேண்டாம்: யாழில் போராட்டம்



பக்கம் 5

வடக்கு மாகாண ஆளுநராக பி.எஸ்.எம்.சாள்ஸ் நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக இலஞ்ச ஊழலுக்கு எதிரான அமைப்பினர், வட மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## ஆளுநர்களை மக்கள் நியமிக்கும் காலம் உதயமாக வேண்டும் : அருட்தந்தை சத்திவேல்!



பக்கம் 5

ஆளுநர்களை மக்கள் நியமிக்கும் காலம் உதயமாக வேண்டும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார். அவரால் நேற்று (19.05.2023) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

## வடக்கு மாகாண சபை நியமனம்: சர்ச்சையை கிளப்பிய தவராசா!



பக்கம் 5

மாகாண விடயங்களை மத்தியில் உள்ள ஒருவர் கையாளுவது என்பது மாகாண சபை முறைமையை நலிவுற செய்யும் விடயம் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார். வடக்கு மாகாண சுகாதார சேவைகள் தலைமை பணிப்பாளராக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி பொறுப்பேற்றுமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் அவர்

## அரசியல்வாதிகள் சிலர் எங்களுக்கு ஏற்பட்டது பாரிய இனப்படுகொலை என கூறுவதற்கு வாய்கூசினவர்களாக இருக்கின்றனர்!

யாழ்ப்பாணத்தில் ஒரு இனம் வெளியேற்றப்பட்டது.அதற்கு இனச்சுத்திகரிப்பு என கூறுபவர்கள் எங்கள் இனம் அழிக்கப்பட்டமைக்கு எமது இனப்படுகொலை செய்யப்பட்டது என கூற தயங்குகின்றார்கள். உண்மையில் இந்த இனப்படுகொலைக்கு நீதி வேண்டும். இதற்காக சர்வதேசம் எமக்கு உதவ வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் குறிப்பிட்டார்.



பக்கம் 5

## மாகாண சபை அதிகாரத்தினை மத்திக்கு தாரைவார்க்கும் செயற்பாட்டை நாங்கள் ஒருபோதும் ஏற்க மாட்டோம்

### வட மாகாணசபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்



பக்கம் 5

மாகாண சபை அதிகாரத்தினை மத்திக்கு தாரைவார்க்கும் செயற்பாட்டை நாங்கள் ஒருபோதும் ஏற்க மாட்டோம் என்ன வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். வைத்தியர் சத்தியமூர்த்திக்கு எந்த பதவியை கொடுப்பதற்கும் நாங்கள் எதிரானவர்கள் அல்லர். எங்களுக்கு அவர் மீது தனிப்பட்ட ரீதியில் எந்த குரோதமும்

## கோட்டா பதவி நீக்கிய ஆளுநரை ரணில் நியமித்தது ஏன்? கேள்வி எழுப்பிய பிரபாகரன்!



பக்கம் 5




ஈழ போராட்டத்தின் வரலாறு திட்டமிட்டு மறைக்கப்படுகிறது என வவுனியாவை சேர்ந்த ஊடகவியலாளர் தனது பார்வையிலான பதிவு என குறிப்பிட்டுள்ளார்

மேலும் அவருடைய பதிவில் குறிப்பிட்டுள்ள தாவது

நேற்று முன்தினம் வவுனியா மாநகரசபை மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வு

போரினால் உயிரிழந்த மக்களின் நினைவேந்தல் என்பதே! இதில் தமிழர் சிங்களவர் என கலந்து கொண்டு அஞ்சலியை செலுத்தியிருந்தனர்.




# ஈழ போராட்ட வரலாறு திட்டமிட்டு மறைக்கப்படுகிறது

இங்கு நிகழ்வை தொகுத்து வழங்கிய சகோதர மொழியை சேர்ந்த ஒருவர் உரையாற்றும் போது தீவிரவாத யுத்தத்தால் உயிர் இழந்த மக்களுக்கான அஞ்சலி நிகழ்வு என்று குறிப்பிடுகிறார் இதனை தமிழில் மொழிபெயர்த்தவர் தீவிரவாதம் என்ற சொல்லை மறைத்து வேறுவிதமாக மொழிபெயர்க்கிறார்

உண்மையில் ஈழத்தில் நடந்தது இன உரிமை போராட்டம் அல்லது விடுதலை போராட்டமே தவிர தீவிரவாத போராட்டம் இல்லை, இதனை அனைத்து தமிழ் சமூகமும் ஏற்றுக்கொள்ள வேண்டும் அது விடுதலை புலிகளாக இருந்தாலும் சரி ஏனைய ஈழ விடுதலை இயக்கங்களாக இருந்தாலும் சரி அனைவரும் உரிமைக்காவும் ஈழவிடுதலைக்காகவுமே போராடினார்கள் இதில் காலப்போக்கில் சிலர் பாதை மாறியிருக்கலாம் அல்லது போராட்ட வியூகம் மாறியிருக்கலாம் ஆனாலும் தீவிரவாத போராட்டம் இங்கு நடக்கவில்லை என்பதே எனது கருத்து

ஏன் இப்படியான ஒரு நிகழ்வில் இப்படியான சொல்பதங்களை பாவிக்க வேண்டும் ..? இதில் சிங்களம் தெரிந்த தமிழர்கள் இருக்கவில்லையா..?

என்னைப்பொருத்தவரையில் எதிர்வரும் காலங்களில் முள்ளிவாய்க்காலிலேயே இராணுவம் மற்றும் சிங்களவர்கள் அல்லது இவர்கள் பின்னனியில் ஏதோ ஒரு அமைப்பு, முள்ளிவாய்க்கால் முற்றம் ஒன்றை அமைத்து எல்லோரும் இணைந்து யுத்தத்தில் இறந்த தமிழ், சிங்களம், முஸ்லிம் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவோம் என ஒரு புதிய யுக்தியை கொண்டுவருவார்கள் என நான் நினைக்கின்றேன் அங்கும் தீவிரவாத யுத்தம் என்ற சொல்லை தான் பார்க்க போகிறோம்..!

கால ஓட்டத்தில் ஈழ போராட்டம், விடுதலை போராட்டம், தமிழர் உரிமை போராட்டம், தமிழர் இன போராட்டம், முள்ளிவாய்க்கால் பேரவலம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்ற சொற்பதங்கள் அல்லது வார்த்தைகள் அனைத்தும் மறைக்கப்பட்டு / மழுங்கடிக்கப்பட்டு, யுத்தத்தால் உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு என்று திரிபு படுத்துவதற்கான சந்தர்ப்பங்களே அதிகமாக உள்ளது

இதற்கான முதற்கட்ட ஆயத்தமாகவே நேற்று முன்தினம் வவுனியா மாநகரசபை மைதான நிகழ்வு இருக்குமோ எனவும் எண்ணத் தோன்றுகிறது

இது எம் இனத்தின் விடுதலை போராட்ட வரலாறுகளை முற்றிலும் மறைத்தும், முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட வரலாற்றையும் எதிர்வரும் தமிழ் சமூகம் இது பற்றி அறியாமலும் தமிழ் உணர்வை இல்லாமலும் செய்வதற்கான திட்டமிட்ட செயல்பாடாகவே தெரிகிறது

ஏற்கனவே நாம் பொருளாதார ரீதியில் வீழ்ந்திருக்கும் போது தமிழர் தாயக பகுதிகளில் தொல்பொருள் திணைக்களத்தினர் ஒருபக்கம் ஆக்கிரமிப்பு, மகாவழி திட்டம் என்று மற்றுமொரு பகுதியால் ஆக்கிரமிப்பு, வனவளத்துறையினரும் இன்னுமொரு பகுயால் ஆக்கிரமிப்பு, மீள்குடியேற்றம் என்று வேற்று இனத்தவர்கள் ஆக்கிரமிப்பு, பௌத்த விகாரைகைகள் என பிரிதொரு வழியில் ஆக்கிரமிப்பு என பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது

இதனிடையில் வடக்கிலும் தெற்கிலும் மதமாற்று குழுக்களின் திட்டமிட்ட செயல்பாடுகள், அதனை எதிர்க்க என தமிழருக்குள்ளேயே பிரிவினை கொண்டுவரும் சிவசேனை போன்ற அமைப்புக்கள் என சின்னாபின்னமாகி போய்க்கொண்டு இருக்கிறது எமது இனம்..!

எனவே தமிழ் அரசியல் கட்சிகள், தமிழ் அமைப்புக்கள், சற்று சிந்தித்து எமது மரபு வழி வரலாற்றுக்களை எதிர்வரும் எம் இனத்திற்கு தெரிய படுத்தவும் வரலாறுகள் மறைக்கப்படாமல் இருக்கவும் வழிவகுத்து கொடுங்கள்/கொடுப்போம்..!

- பரமேஸ்வரன் கார்த்தீபன் -

# விடுதலை புலிகளை மீள் உருவாக்கும் முயற்சியில் இந்தியா: பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணை!



விடுதலை புலிகளை மீள் உருவாக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபடுகின்றதா என கொழும்பிலிருந்து வந்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர் தன்னிடம் விசாரணை மேற்கொண்டார்கள் என ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், கடந்த எட்டு ஆண்டுகளாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றோம். வடக்கு கிழக்கு மாகாணங்களில் எமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன் எமது ஜனநாயக போராளிகள் கட்சி தேசிய மாநாடு ஒன்றையும் நடத்தி இருக்கின்றது.

இதேவேளை தமிழ் தேசிய அரசியல் கட்சிகளோடு இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் அங்கம் வகிக்கின்றோம். கடந்த 11ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு பிரிவிலிருந்து எனது வீட்டிற்கு வந்து என்னை விசாரித்தார்கள்.விசாரணையின் பின்னர் 15 ஆம் திகதி மீண்டும் பயங்கரவாத தடுப்பு பிரிவு கொழும்பு அலுவலகத்திற்கு வருமாறு கூறினார்கள்.
எனினும் கட்சி பணிகள் உள்ளதால் குறித்த திகதியில் என்னால் வரமுடியாது பிறிதொரு திகதியில் வருவதாக கூறியிருந்தேன். எனினும் அவர்கள் 16ஆம் திகதி மீண்டும் எனது வீட்டுக்கு வந்து என்னிடம் நான்கு மணித்தியாலமும் 50 நிமிடங்களும் விசாரணைகளை மேற்கொண்டார்கள்.மூன்று பேர் கொண்ட குழுவினர் இந்த விசாரணை நடவடிக்கைகள் ஈடுபட்டிருந்தனர். என்னையும் எனது குடும்பத்தையும் மிரட்டும் வகையில் இவர்களது விசாரணை அமைந்திருந்தது. குறிப்பாக இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கிறது என்று அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் நல்லுறவு போன்று காட்டிக் கொண்டாலும் இந்தியாவிற்கு எதிரான நிலைப்பாடுகளையும் கொண்டிருக்கின்றது. அக்டோபர் மாதம் 10ஆம் தேதி டெல்லியில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் நான் கலந்து கொண்டமை தொடர்பாக விசாரித்தார்கள். குறித்த மாநாட்டில் பயங்கரவாத சட்டம் நீக்கப்பட வேண்டும், மாகாணங்களுக்குரிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் உரிமை, 13ஆம் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற விடயங்களை நான் இந்தியாவிடம் வலியுறுத்தி இருந்தேன்.

ஜனநாயக போராளிகள் கட்சி இந்தியா எவ்வாறன ஆலோசனைகளை வழங்குகின்றது. இந்தியா பணம் வழங்குகின்றதா? போன்றவற்றை இவர்கள் விசாரணைகளின் போது கேட்டிருந்தார்கள்.இந்தியா இங்கு என்ன செய்யுமாறு தங்களை பணித்துள்ளார்கள் போன்ற கேள்விகளையும் அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு நான் கூறினேன். இந்திய அதிகாரிகளை சந்தித்தால் அவர்கள் இலங்கை நாட்டு மக்களின் சுதந்திரமான வாழ்வினை விரும்புவதாக என்று கூறுவார்களேயொழிய தமிழ் மக்கள் தொடர்பாக எந்த விதமான கருத்துக்களை அவர்கள் கூறுவதில்லை என்றேன்.

குறிப்பாக இந்தியா பணத்தினை தந்து இலங்கை அரசுக்கு எதிராக செயல்பட சொல்கின்றதா என்ற தொனியில் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்திய அரசாங்கம் இலங்கை பொருளாதார ரீதியாக நெருக்கடிகளை சந்தித்தபோது இலங்கைக்கு முதலாவதாக உதவி செய்து இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டிருந்தது. என்பதனையும் நான் சுட்டிக்காட்டி இருந்தேன்.

இவர்களின் இத்தகைய விசாரணைகள் தொடர்பாக இந்திய தூதரகம் மற்றும் ஏனைய தூதரகங்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு நாங்கள் இவர்களின் விசாரணை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க இருக்கின்றோம். குறிப்பாக சில தமிழ் அரசியல்வாதிகளும் போராளிகளை காட்டிக் கொடுத்து அரசுடன் இணைந்து சதி முயற்சி செய்கின்ற தகவல்களும் எமக்கு கிடைத்திருக்கின்றன.

எனவே தமிழ் அரசியல்வாதிகள் போராளிகள் மீது இவ்வாறு கட்டவிழ்த்து விடப்படும் விசாரணைகள் தொடர்பில் மௌனம் காக்காது அதற்கு குரல் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பாக முள்ளிவாய்க்கால் நினைவு தினம், தியாகி திலீபன் நினைவு தினம், மாவீரர் நாள் நினைவு தினங்களை நீங்கள் எவ்வாறு செய்கின்றீர்கள்? பணம் யார் வழங்குகிறார்கள் போன்ற கேள்விகளையும் அவர்கள் எழுப்பியிருந்தார்கள். இதற்கு புலம்பெயர் உறவுகளின் பங்களிப்பின் மூலமே நாங்கள் இத்தகைய விடயங்களை செய்கின்றோமேயொழிய எந்த ஒரு நாட்டினுடைய நிதி பங்களிப்பில் இத்தகைய நிகழ்வுகளை செய்வதில்லை என்பது தொடர்பில் அவர்களுக்கு தெளிவுபடுத்தினேன்.

அவர்கள் மீண்டும் கேட்டார்கள் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு இந்தியா உங்களுக்கு பணம் வழங்குகின்றதா? என்பது தொடர்பில் அவர்களுடைய கேள்வி அமைந்திருந்தது.

குறிப்பாக ஜனநாயக போராளிகள் கட்சியினுடைய ஆவணங்களையும் தங்களிடம் சமர்ப்பிக்குமாறு கூறியிருக்கின்றார்கள் அதற்கு நான் கூறுகின்றேன் எங்களுடைய ஆவணங்கள் தேர்தல் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்று கூறினேன். தினமும் ஆவணங்களை வழங்குமாறு தொலைபேசி அழைப்பு எடுத்த வண்ணம் உள்ளார்கள்.

இந்த நாட்டினுடைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஒரு செய்தியை சொல்ல விரும்புகின்றோம். ஜனநாயக ரீதியாக செயல்படுகின்ற எங்களை நீங்கள் இவ்வாறான அடக்குமுறைகள் மூலம் எம்மை கட்டுப்படுத்த முயற்சித்தால் அது வேறு விளைவினை ஏற்படுத்தும் என்பதையும் நாம் கூறிவைக்க விரும்புகின்றோம்.

குறிப்பாக இந்தியா விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கம் செய்ய முயற்சிக்கின்றதா? என்றும் கொழும்பிலிருந்து வந்த பயங்கரவா தடுப்பு பிரிவினர் விசாரணை மேற்கொண்டார்கள். குறிப்பாக ஆயுதம் பணம் என்பவற்றை வழங்கி மீள் உருவாக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபடுகின்றார்களா? என்றும் அவர்கள் கேட்டார்கள் - என்றார்.

# முள்ளிவாய்க்கால் இறுதிப் போரின் சர்வதேச சாட்சியாளர்! துணிகரமான “மேரி கொல்வின்” பெண் பத்திரிகையாளர்!

வன்னியில் இறுதிக்கட்ட போர்க் காலங்களில் ஈழத்தமிழர்களிற்காக ஓங்கி ஒலித்த சர்வதேச பத்திரிகையாளர்களின் குரல்களில் இவரின் குரலும் ஒன்று. தற்போது அவர் குரல் ஓய்ந்தாலும் தமிழினத்தின் நெஞ்சங்களில் இவர் நிரந்தரமாய் வாழ்கின்றார். அவர் தான் மேரி கொல்வின் (Mary Colvin) எனும் துணிகரமான பெண் பத்திரிகையாளர்.

எங்கோ பிறந்து, யாருக்காகவோ உழைத்து, எங்கோ இறந்து போன கொல்வினின் வாழ்க்கையானது தமிழ் ஊடகவியலாளர்களுக்கு முன்னுதாரணமாக அமைகின்றது.

> **“வன்னியில் இறுதிக்கட்ட போர்க்கால தமிழின அழிப்பில் ஐநாவின் பங்கை உலகறிய செய்த நேரடி சாட்சியும் “வெள்ளைக்கொடி” விவகாரத்தின் அனைத்துலக சாட்சியுமான மேரி கொல்வின் தனது வாக்குமூலத்தையும் உலகறியச் செய்துள்ளார்.”**

ஈழ விடுதலைப் போராட்டத்தை உலகளாவிய அளவில் வெளியில் எடுத்து சென்றவரும் இறுதி இன அழிப்பின் சாட்சிகளில் ஒருவருமான மேரி கொல்வின் அம்மையாரின் வரலாற்றைப் பேசும் “A Private War” திரைப்படம் ஈழத் தமிழர்களின் போர்க்கால உண்மையை உலகிற்கு வெளிக்காட்டியது.



“அது ஓர் அவசரமான அழைப்பு. ஆனால், சில மணிநேரத்தில் இறக்கப் போகும் ஒருவரின் அழைப்பு போன்று அது இருக்கவில்லை!..” என்று தொடங்கி மேரி கொல்வின் எழுதிய கட்டுரை இன்றைக்கும் இறுதுப் போர்க் குற்றத்தின் சாட்சியாக ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இறுதிப் போர் முடிந்த பிறகும், அவருக்கு மிரட்டல்கள் வந்தன. அதை அவர் பொருட் படுத்தவில்லை. தொடர்ந்தும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தார்.

உலகத் தமிழர்களின் உள்ளத்தில் என்றும் நினைவிருக்கும் போர்ச்சூழல் ஊடகவியலாளர் மேரி கொல்வின் அம்மையாரின் ஆற்றிய பணி.

**அப்பாவி தமிழர்களின் அபயக் குரல் :**

அப்பாவிகளின் அபயக் குரல் எங்கெல்லாம் கேட்கிறதோ, அங்கு தனது இருப்பைப் பதிவு செய்பவர் பத்திரிகையாளர் மேரி கொல்வின். அல்லட்படும் மக்களின் துயரத்தை உலகத்தின் கண்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டிய ஊடகவியலாளரே அவர்.

வன்னியில் இறுதிக்கட்ட போர்க் கால தமிழின அழிப்பில் ஐநாவின் பங்கை உலகறிய செய்த நேரடி சாட்சியும் “வெள்ளைக்கொடி” விவகாரத்தின் அனைத்துலக சாட்சியுமான மேரி கொல்வின் தனது வாக்குமூலத்தையும் உலகறியச் செய்துள்ளார்.

மேரி கொல்வின் அவர்கள் தனது சுய வாக்குமூலத்தில் “2001ம் வருடம் வன்னியிலிருந்த ஐந்து இலட்சம் தமிழர்களின் அவலநிலை



யினை அறிவதற்காய் அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் நான் நுழைந்தேன். அங்கு நான் செல்வதற்கு இலங்கை அரசு அனுமதிமறுத்ததால் சிறு விளக்குகளின் ஒளியுடன், பல முட்கம்பி வேலிகளை தாண்டி, இடுப்பளவு தண்ணீரில் காட்டுப் பாதையில் பயணம் செய்தேன்.

**அனைத்துலக சாட்சிக் குரல் :**

எனை இனம் கண்டுகொண்ட படையினர் என்மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டனர். நான் ஒரு பத்திரிகையாளர் என கத்திய போதும் அவர்கள் அதை ஒரு பொருட்டாய் எடுத்துக் கொள்ளவேயில்லை.

கைக்குண்டுகள் கொண்டு எனை தாக்கிய அவர்களின் முன்னால் நான் சென்றபோது நெஞ்சில் குண்டுக்காயங்களிலிருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது.

அக்காயங்களுடனேயே எனை தாக்கிய படையினர் மிலேச்சத்தனமாக எனை அவர்களின் கனரக வாகனம் ஒன்றிற்குள் தூக்கி எறிந்தார்கள். இலங்கைப்படைகளின் தாக்குதலால் தன் கண் ஒன்றை இழந்த மேரி கொல்வின் அம்மையாரின் கூற்றே இது வாகும்.

ஈழத்தமிழர்களிற்காக ஒலித்த சொற்ப சர்வதேச பத்திரிகையாளர்களின் குரல்களில் இவரின் குரலும் ஒன்று. தமிழினத்தின் நெஞ்சங்களில் இவர் நிரந்தரமாய் வாழ்கின்றார்.



**சிரியா 2012இல் படுகொலை :**

இலங்கை, ஆப்கானிஸ்தான், செச்னியா, ஈராக், லெபனால் உட்பட உலகின் மிகவும் கொந்தளிப்பான பகுதிகளில் செய்திசேகரிப்பில் ஈடுபட்டிருந்த போதிலும் மேரி கொல்வின் தனது மனிதாபிமானத்தை ஒருபோதும் இழந்துவிடவில்லை.

2012 பெப்ரவரி 22 ம் திகதி அவர் சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் பிடியிலிருந்த ஹொம்ஸ் நகரில் கொல்லப்பட்டார். அவர் இருந்த இட



த்தை இலக்குவைத்து தாக்குதல் நடாத்தப்பட்டது.


அவர் ஓர் சர்வதேச பத்திரிகையாளர் என்பதால் அவரை மௌனமாக்குவதற்காக இலக்கு வைத்து கொல்லப்பட்டார் என பின்னர் தெரிவிக்கப்பட்டது. இத் தாக்குதல் தற்செயலாக இடம்பெற்ற விடயமல்ல. அது ஒரு திட்டமிட்ட படுகொலை என்றே அறியப்படுகிறது.

**கிழக்கு திமோரில் பெண் குழந்தைகளை காப்பாற்றிய மேரி :**

மேரி கொல்வின் 1999 ம் ஆண்டு கிழக்கு திமோரில் முகாமொன்றில் சிக்குண்டிருந்த 1500 பெண்கள் குழந்தைகளை காப்பாற்றினார். அங்குள்ள அகதி முகாமிலிருந்து



ஆண்கள் தப்பியோடிவிட்ட நிலையில் மேரி கொல்வினை அங்கிருந்து வெளியேறுமாறு அதிகாரிகள் உத்தரவிட்ட போதிலும் அவர்




அதனை ஏற்கமறுத்தார். மக்களின் சேவகனாக கடமை புரிந்த மேரி, தனது செய்திகளில் அவர் இந்த செய்தி குறித்தே அதிகம் பெருமைப்படுவார்.


இளம் பத்திரிகையாளர்கள் விடயத்தில் அவர் மிகவும் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டார் அவர்களை தனது பாதையில் பயணிப்பதற்கான உத்வேகத்தை எப்போதும் வழங்கினார். மேரி கொல்வின் உயிரிழப்பதற்கு சில நாட்களிற்கு முன்னர் இளம் பத்திரிகையாளர் ஒருவர் அவருக்கு ஒரு மின்னஞ்சலை அனுப்பியிருந்தார்.

அதில் மேரிகொல்வினின் சிரியா குறித்த அச்சமூட்டும் செய்திகள் தன்னையும் ஒரு பத்திரிகையாளராக மாற்றியது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச ரீதியில் இளம் பத்திரிகையாளர்களை முன்னோக்கி நகர்த்துவது மிகவும் கடினமான பணியாயினும், பல்வேறு போர்க்களங்களில் தனது உயிரை துச்சமென மதித்து மற்றய ஊடகவியலாளர்களுக்கு உறுதுணையாக இருந்தார்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை உலகளாவிய அளவில் வெளியில் எடுத்து சென்றவரும் இறுதி இன அழிப்பின் சாட்சிகளில் ஒருவருமான மேரி கொல்வின் அம்மையாரின் வரலாற்றைப் பேசும் “A Private War” திரைப்படமும், எங்கள் மக்களின் துயரத்தை உலகிற்கு உண்மையை வெளிச்சமாய் காட்டியுள்ளது.

மேரி கொல்வின் சிரியாவில் கொல்லப்பட்டு பதினொரு வருடங்கள் ஆகின்றது. மக்களுக்காக குரல் கொடுத்த அவர், சிரியாவில் வைத்து 2012 பெப் 22 இல் படுகொலை செய்யப்பட்டாலும் தமிழினத்தின் நெஞ்சங்களில் அவர் நிரந்தரமாய் என்றும் வாழ்கின்றார்.



- நவீனன் -

# கலையரசனால் கொண்டுவரப்பட்ட முன்மொழிவு : திருக்கோவில் பிரதேசத்தில் கல்குவாரி அனுமதிகள் நிறுத்தம்!




திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தாண்டியடி சங்கமன் கிராமங்களில் மலைகளை உடைந்து கல்குவாரி அமைப்பதற்கான விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இது தொடர்பில் பிரதேச செயலாளரின் அனுமதி இல்லாமல் ஏனைய திணைக்களங்களங்களால் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும், இது பிரதேசத்தற்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்துவனவாக இருப்பதால் பிரதேச அமைப்புகள், பொதுமக்களின் வேண்டுகோளுக்கு அமைய இதனை இடைநிறுத்துமாறும் தெரிவித்து மேற்படி கிராம மக்களின் சார்பாக அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் அவர்களால் திருக்கோவில் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முன்மொழிவொன்று முன்வைக்கப்பட்டது.

இதனை ஆராய்ந்த அபிவிருத்திக் குழு தற்போதைய கால சூழ்நிலையில் இதற்கான தேவை இல்லாமலிருப்பதாலும், பிரதேச மக்களின் எதிர்ப்பு காணப்படுவதாலும், பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் எதுவும் நடைபெறாத நிலையில் இவ்வாறானதொரு கல்குவாரி அவசியமானதொன்றல்ல எனவும் தெரிவித்து இவ் அனுமதியை இடைநிறுத்தியது.

திருக்கோவில் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவரும், அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான டபிள்யு.டி.வீரசிங்க தலைமையில் இடம்பெற்ற போது இவ்விடயம் பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் அவர்களால் கொண்டு வரப்பட்டது. இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் தெரிவிக்கையில்,

திருக்கோவில் பிரதேச செயலாளரின் அனுமதியோ, ஆலோசனைகளோ பெறாமல் இதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வனவளபாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதி இல்லாமல் சாதாரண குடிமகன் ஒருவர் அப்பிரதேசத்திற்குள் செல்லவும் முடியாது எதுவும் செய்து விடவும் முடியாது. ஆனால், வனவளப் பாதுகாப்புத் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, புவிச்சரிதவியல் திணைக்களம் போன்றன பிரதேச செயலாளரின் அனுமதி இல்லாமல் கல்குவாரிக்கான அனுமதியை வழங்கியுள்ளதாக நான் அறிகின்றேன்.

இது தொடர்பில் குறித்த பிரதேசத்தின் பொது அமைப்பின் பிரதிநிதிகள் பல முறைப்பாடுகளை என்னிடம் முன்வைத்துள்ளனார். ஏற்கனவே இவ்வாறு தாண்டியடியில் கல்குவாரி அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்ட போது அங்கு பாரிய பிரச்சனை ஏற்பட்டது. மக்கள் செறிந்து வாழுகின்றதும், கால்நடைகள் வளர்ப்பதுமான இடங்களாக இருப்பதால் பிரதேச செயலாளர் உட்பட நானும் நேரடியாகச் சென்று களஆய்வு செய்து சில தடைகளை பிரதேச செயலாளர் ஏற்படுத்தினார்.

எனவே இந்தப் பிரதேசத்தில் இவ்வாறு மலைவகள் உடைக்கின்ற, கல்குவாரி அமைப்பது தொடர்பான விடயங்கள் கையாளப்படுகின்ற போது இங்குள்ள பிரதேச செயலாளரின், மக்கள் அடிப்படை அமைப்புகளின் நிலைப்பாடுகளை அறிந்தே இதற்குரிய அனுமதிகள் வழங்கப்பட வேண்டும். இது தொடர்பில் பாரிய பிரச்சினை எமது பிரதேசத்தில் எழுந்திருக்கின்றது.

எனவே இது தொடர்பில் பிரதேச செயலாளர், திணைக்கள அதிகாரிகள் தங்கள் கருத்துகளை வழங்க வேண்டும் என்பதுடன், இதனை தடைசெய்வதற்கான தீர்மானத்தையும் இப்பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பிரதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் சிலரும் இக் கல்குவாரி அமைப்பதால் ஏற்படுகின்ற பாதக நிலைமை குறித்து தெளிவு படுத்தினர்.

அதன் பின்னர் பொது அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பின் காரணமாக தற்போது நாட்டில் எவ்வித பாரிய அபிவிருத்தி செயற்பாடுகளும் இடம்பெறாத நிலையில் சூழலுக்குப் பாதமாக அமையும் இவ்வாறான கல்குவாரி அனுமதிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக அபிவிருத்திக் குழுத் தலைவரால் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதே வேளை இல்மனைட் அகழ்வினை தடை செய்து பிரதேச அபிவிருத்திக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தையும் மீறி இல்மனைட் தொழிற்சாலை அலுவலக வேலைகள் இடம்பெறுவதாகவும் பிரதேச மக்கள் முறைப்பாடு செய்தனர். பிரதேச அபிவிருத்திக் குழுத் தீர்மானமே இறுதியானது இதனை மீறி யாரும் செயற்படுவார்களாக இருந்தால் பாதுகாப்புப் பிரிவினர் எதுவித பாரபட்சமும் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அபிவிருத்திக் குழுத் தலைவரால் இதன் போது தெரிவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நிதி கையாளல் மற்றும் நுண்கடன்திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு !



சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் நிதி கையாளல் மற்றும் நுண்கடன்திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் அவர்களின் வழிகாட்டலில் சாய்ந்தமருது விதாத வள நிலையத்தில் சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் வளவாளராக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு அம்பாரை மாவட்ட உதவி பணிப்பாளர் ஐ.எம்.நாசர், மத்திய வங்கியின் திருகோணமலை கிளையின் முகாமையாளர் பி.நிரோசன் கலந்து கொண்டதுடன் அதிதிகளாக விஞ்ஞான தொழிட் ப உத்தியோகத்தர் யு.எம்.முஸம்மில், பெண்கள் அபிவிருந்தி உத்தியோகத்தர் எம்.வி.நஸ்லா, பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் ஏ.அபிறா, சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எம்.எம்.நாஸிர் அலி மற்றும் எம்.ஐ.எப்.சுசான் சிஹ்னாஸ் என பலரும் கலந்து கொண்டனர்.

# அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் வருவதில்லை திலீபன் எம்.பி குற்றச்சாட்டு!

மாவட்ட மற்றும் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் வருவதில்லை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட மற்றும் பிரதேச செயலக அபிவிருத்திக் குழு கூட்டங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் வருவதில்லை. ஆனால் தனிநபர்களின் பிரச்சனைக்கு உடனடியாக வருகிறார்கள். மன்னாரில் இடம்பெற்ற மண் ஆட்களின் பிரச்சனையில் சில மதகுருமாருடன் இணைந்து சில பாராளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக மண் அள்ளுவதற்கான அனுமதியை பெற்றுக் கொடுத்துள்ளார்கள்.

இதைவிட, மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சனைகள் உள்ளன. இதேபோல் அந்த பிரச்சனைகளையும் பேசி மக்களுக்கான தீர்வை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

சில நாட்களுக்கு முன் ஜனாதிபதி தலையையில் கூட்டம் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் அபிவிருத்தி சார்ந்த எந்த கருத்துக்களையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசவில்லை. மாறாக தொல்பொருள் சம்மந்தப்பட்ட பிரச்சனை தான் பேசப்பட்டது.

மக்களின் வாழவாதாரம், வயற்காணகளை விடுவித்தல், தொழில் துறைகளை ஏற்படுத்துதல் தொடர்பில் அங்கு பேசவில்லை. எங்களுக்கு கிடைத்த சந்தர்பத்தில் காணிவிடுவிப்பு, காணி ஆவணங்களை பெற்றுக் கொடுத்தல், நில அளவை பிரச்சனைக்கு தீர்வு காணல் தொடர்பில் பேசி முன்னேற்றம் கண்டுள்ளோம்.

அதன் ஒரு கட்டமாக வட இலாகாவுடன் பேசி காணிகள் விடுவிக்கப்படுகிறது. மத்திய தர வர்க்கத்தின் காணிகள் விடுவிக்கப்படுகிறது. ஆவணங்கள் வழங்கப்படுகிறது. எனவே நாங்கள் சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி வருகிறோம் எனத் தெரிவித்தார்.

# கிழக்கின் புதிய ஆளுநர் கடமையை பொறுப்பேற்றார்



கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட செந்தில் தொண்டமான் உத்தியோகபூர்வமாக தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த 16ஆம் திகதி அதிபர் முன்னிலையில் பதவிப்பிரமாணம் பெற்றுக்கொண்ட ஆளுநர், நேற்று திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் , இராஜாங்க அமைச்சர் ச. வியாழேந்திரன், கிழக்கு மாகாண சபையின் அரச திணைக்களங்களது செயலாளர்கள், அரச திணைக்கள உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பதில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி நியமனம்!



வடக்கு மாகாணத்தின் பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். நேற்று (வெள்ளிக்கிழமை) இவர் யாழ் போதனா வைத்திய சாலையில் தனது கடமைகளை பொறுப்பேற்றார்,

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும் வரை பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றுவதோடு யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பதவிக்கு மேலதிகமாக இக்கடமையை ஆற்றுவார் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## 14 ஆண்டுகளுக்கு முன்பு...

பிரித்தானிய நாடாளுமன்றத்தில், இலங்கை அரசின் இன அழிப்பின் நிகழ்ச்சி நிரலில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு பற்றி உரையாற்றிய போதே அவர் மேற் கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய முகிலினி, "பெண் விடுதலை இல்லையேல் மண் விடு தலை இல்லை என்று தமிழீழ தேசிய தலை வர் கூறியுள்ளார்.

சரியாக 14 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில், இதே நேரத்தில் உயிரில் பாதியை இழந்து அழுது ஆற்பரித்து அடங்க முடியா மல் தவித்து கொண்டிருந்த சிறுமி.

இன்று இந்த பிரித்தானிய பாராளுமன்றத்தில் ஒரு பெண்ணாகி எமது மக்களின் உரிமை யின் குரலாய் ஒலித்து கொண்டிருப்பதை நினைத்து பெருமைபடுவதா? இல்லை இத் தனை காலமாக செயலாற்ற முடியாதவர் களாக நாங்கள் இருப்பதை எண்ணி தலை குனிவதா?" என தெரிவித்துள்ளார்.

## இலஞ்ச ஊழல் பெருச்சாளியை...

வடக்கு மாகாண ஆளுநர் செயலகமுன்ற லில் நேற்று காலை 10 மணியளவில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஆறு பேர் கலந்து கொண் டதோடு ஜனாதிபதியினால் ஆளுநராக நிய மிக்கப்பட்டுள்ள சாள்ஸ்"டன் தொடர்புடைய இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் குறிப்பிடப் பட்ட பதாதைகளை தாங்கியவாறு போராட் டத்தில் ஈடுபட்டார்கள்.

அத்தோடு ஊழல்வாதியை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்ய வேண்டும் எனவும் தவறும் பட் சத்தில் வடக்கு மாகாண ஆளுநர் அலு வலகம் சுற்றி வளைக்கப்பட்டு போராட்டம் நடத்தப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்த னர்.

பி.எஸ்.எம்.சாள்ஸ் மீது நீண்டகாலமாக பல ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வரு கிறது. அவர் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக செயற்பட்ட காலத்தில் ஊழல் மோச டிகள் நிகழ்ந்ததாக மாவட்ட சிவில் அமைப் பினர் பல ஆவணங்களை வெளியிட்டிருந் தனர். அப்போது ஊடகங்களிலும் அது வெளி யானது. இது தொடர்பில் அப்போதைய ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கும் கொண்டு செல்ல முயன்றனர். எனினும், சாள்ஸ் பதவி உயர்வு பெற்று சுங்க திணைக்கள பணிப்பா ளராக நியமனமானார்.

## வடக்கு மாகாண சபை நியமன...

இதனை தெரிவித்துள்ளார். மத்திய அரசின் ஆளுகைக்குட்பட்ட யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக சத்திய மூர்த்தி பதவியில் உள்ளார்.

அந்த பணிப்பாளர் பதவியில் இருந்து விலகி விட்டு மாகாண சுகாதார சேவை பணிப் பாளர் பதவியை பெறுவதாயின் எந்தவித ஆட் சேபனையும் இல்லை.

இருப்பினும், அவர் மத்திய அரசாங்கத்தின் கீழ் செயற்படும் யாழ் போதனா வைத்தி யசாலையின் பணிப்பாளராக கடமை ஆற்றிக் கொண்டிருக்கும் அதேவேளை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவி யையும் பொறுப்பேற்று இருப்பது என்பது எமது மாகாண சபையின் முறைமையினை நலிவுறசெய்யும் என்பதுதான் எமது ஆதங் கம். இவ்விடயம் தொடர்பில் உடனடியாக நட வடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## மாகாண சபை அதிகாரத்தினை...

கிடையாது. எனினும் மாகாண சபைக்குள்ள அதிகாரங்களுக்குட்பட்ட நிறுவனங்கள் அல் லது திணைக்களங்கள் ஆகியவற்றுக்கான நியமனங்கள் மாகாண நிர்வாகத்திற்குட் பட்டவை.

அப்படி இருக்கும்போது மத்திய அரசாங்கத் தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்ற யாழ்ப் பாண போதனா வைத்தியசாலையின் பணிப் பாளரான செயற்படும் ஒருவரை மாகாண சுகாதார பணிப்பாளராக நியமிப்பது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

ஏற்கனவே இதற்கு முன்னரும் ஒருமுறை நியமனம் வழங்கப்பட்ட போது மாகாண சபை பதவியில் இருந்த காலம் என்பதினால் அதனை நாங்கள் ஆட்சேபித்திருந்தோம்.

தற்பொழுது மாகாண சபை இல்லாத நிலை யிலும் மாகாண சபை அதிகாரத்தினை மத்தி க்கு தாரைவார்க்கும் செயற்பாட்டை நாங்கள் ஒருபோதும் ஏற்க மாட்டோம்.

மேலும், இரண்டு பதவிகளையும் இவர் வகிப்பதனால் இரண்டு பதவிகளுக்குமே பாதிப்பு ஏற்படும். செயற்திறன் குறையும். ஆனபடியினால் ஏதாவது ஒரு பதவிக்கு மாத் திரம் அவரை நியமிப்பது என்பது சாலச் சிறந் தது.

இந்த விடயத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட ஆளுநர் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

## ஆளுநர்களை மக்கள் நியமிக்...

வடக்கு ,கிழக்கு மற்றும் ஊவ மாகாணங் களுக்கு ஜனாதிபதியால் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்கிற்கும், கிழக் கிற்கும் இரண்டு தமிழர்கள் நியமிக்கப்பட் டுள்ளதோடு ஊவமாகணத்தின் முன்னாள் அமைச்சர் கிழக்கு மாகாணத்தின் ஆளந ராக நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தமிழர்கள் நியமிக்கப்பட் டனர் என பெருமை கொள்வோரும் உண்டு. இதில் பெருமைப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆளுநர்கள் ஜனாதிபதியின் தேவையை நிறைவேற்றுவர்களை தவிர மக்கள் கோரிக்கைகளை செவிமடுப்பவர்களாகவே இருப்பார்கள். செந்தில் தொண்டமான் ஊவா மாகண சபையின் அனுபவம் உள்ளவர். அவரை ஊவ மாகாணத்திற்கு ஆளுநராக நியமிக்காதது ஏன்? வேறொரு தமிழரை கிழ க்கு மாகாணத்திற்கு நியமிக்காததன் நோக் கம் என்ன? அதுவே ஜனாதிபதியின் நரி தந்திரம்.

தமிழர்கள் அதிகமாக வாழும் மத்திய மற்றும் ஊவமாகாணங்களுக்கு இது நாள் வரை தமிழர்களை எவரும் ஆளுநர்களாகவோ முதலமைச்சர்களாகவோ நியமிக்கப்பட வில்லை. அந்த அளவு துணிவு கட்சிகளுக் கும் கிடையாது. மலையக மக்களின் வாக்கு கள் வேண்டும். ஆனால் தமிழர்களை அதி காரத்தில் வைத்து விடக்கூடாது. இவ்வாறு நியமித்தால் மலையக பிரதேசத்தை மலை யக தமிழர்களின் தேசியத்தின் அடையாள மாக அடையாளப்படுத்தி விடுவார்கள் என்று பயம். இது சிங்கள பௌத்த ஆதிக்கத்தின் வெளிப்பாடு என்றும் கூறலாம்.

ஏற்கனவே அமைச்சர் பதவி ஒன்று இல ங்கை தொழிலாளர் காங்கிரசுக்கு தொண் டமான் குடும்பத்தவருக்கு கொடுக்கப்பட்ட நிலையில் அதே கட்சியை சேர்ந்த அதே தொண்டமான் குடும்பத்தை சார்ந்த இன் னொருவர் ஆளுநராக நியமிக்கப்பட்டு இருக் கின்றார். தற்போது அவர்களின் கட்சி முழு மையாக ஜனாதிபதியினதும் ஐக்கிய தேசிய கட்சியினதும் கைக்குள் சென்று விட்டது என்று கூறலாம். இதுவரை காலமும் முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சரின் அரவணைப்பிற்குள் வளர்ந்தவர்கள் தற் போது ரணிலின் அரவணைப்புக்குள் சென்று விட்டனர். இது அடுத்த தேர்தலை இலக்கு வைத்து மலையகத்தை தமதாக்கும் செயற் பாடாகும்.

செந்தில் தொண்டமானின் நியமனத்தின் மூலம் தற்போது ஜனாதிபதி இந்தியாவையும் சமாளித்து விட்டார். புதிய ஆளுநராக பதவி ஏற்றுள்ள செந்தில் இந்தியா விரும்பும், இந்து த்துவா சிந்தனையாளர்கள் விரும்பும், தமிழ கத்தோடு நெருங்கிய ஒருவரும் ஆவார். இனிமேல் இந்திய துணை தூதரகம் கிழக் கில் அமைந்தது போன்றது தான்.

வடகிழக்கினை சிங்கள பௌத்த தொல்லியல் திணைக்களம் வேகமாக ஆக்கிரமிக்கும் காலமிது. புதிய ஆளுநர்கள் அதற்கு என்ன செய்ய போகின்றார்கள். ஆளுநர்களை மக் கள் நியமிக்கும் காலம் உதயமாக வேண் டும்.

## அரசியல்வாதிகள் சிலர் எங்க...

மட்டக்களப்பு அம்பாறை இலங்கை தமிழர சுக்கட்சி கிளை ஏற்பாடு செய்த வலிசுமந்த முள்ளிவாய்க்கால் மே 18 நிகழ்வின் 14 ஆவது நிறைவினை அனுஸ்டிக்கும் முகமாக நாவிதன்வெளி 15 ஆம் கிராமம் ஸ்ரீ முருகன் ஆலயலில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அங்கு கருத்து தெரிவித்த அவர் எங்களுக்கு ஏற்பட்டது பாரிய இனப்படுகொலை ஆனால் எங்களது அரசியல்வாதிகள் சிலர் கூட இன்று இனப்படுகொலை என கூறுவதற்கு வாய் கூசினவர்களாக இருக்கின்றனர். யாழ்ப் பாணத்தில் ஒரு இனம் வெளியேற்றப்பட்டது. அதற்கு இனச்சுத்திகரிப்பு என கூறுபவர்கள் எங்கள் இனம் அழிக்கப்பட்டமைக்கு எமது இனப்படுகொலை செய்யப்பட்டது என கூற தயங்குகின்றார்கள். உண்மையில் இந்த இனப்படுகொலைக்கு நீதி வேண்டும். இதற் காக சர்வதேசம் எமக்கு உதவ வேண்டும். இந்த இறந்த ஆத்மாக்கள் எந்த நோக்கத்திற் காக செயற்பட்டதோ நாமும் அதற்காகவே செயற்பட தயாராக வேண்டும். அவர்களின் தியாகங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்காக இலங்கை தமிழரசுக்கட்சியினர் ஒற்றுமையாக உழைக்க கடமைப்பட்டுள் ளோம் என குறிப்பிட்டார்.

குறித்த நிகழ்வின் போது நாவிதன்வெளி 15 ஆம் கிராமம் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் கூட்டு வழிபாடு இடம்பெற்றது.பின்னர் பூசையை தொடர்ந்து நினைவுச்சுடர் மாவீரர் குடும்பம் சார்பாக இரு தாய்மார் ஏற்றினர். அத்துடன் 1 நிமிடம் மௌன அஞ்சலியுடன் ஏனையோர் சுடர் ஏற்றினர்.

மேலும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பி னர்கள் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறு ப்பினர்கள் தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண் டிருந்தனர்.

## கோட்டா பதவி நீக்கிய ஆளுந...

ஜனநாயக தேர்தலை நிறுத்துவதற்கு ஒத் தாசை புரிந்த பி. எஸ். எம். சாள்ஸ் வட மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டமை மக் கள் ஜனநாயகத்தை கேள்விக் குறியாக்கும் செயல் என ஐக்கிய மக்கள் சபையின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வன்னிய சிங்கம் பிரபாகரன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழில் உள்ள வட மாகாண ஆளுநர் தலைமை அலுவலகத்திற்கு முன்னால் இடம் பெற்ற இலஞ்ச ஊழலுக்கு எதிரான அமைப்பு நடத் திய கவனயீர்ப்பு போராட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெற இருந்த உள்ளூராட்சி மன்ற தேர் தலை நிறுத்துவதற்காக சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பதவியில் இருந்து ராஜினாமா செய்தவர் தற்போதைய ஆளுநர் சாள்ஸ்.

இந்நிலையில் தனது சுப போகங்களுக்கும் பதவி ஆசைகளுக்கும் மக்களின் ஜனநாயகத் தேர்தலை கேள்விக்குறியாக்கியது மட்டு மல்லாது இலங்கையில் போட்டியிட்ட உள்ளு ராட்சி மன்ற வேட்பாளர்களின் நம்பிக்கை யையும் சிதறடித்துள்ளார்.

இவர் முன்னர் ஆளுநராக இருந்தபோது எமது பிரதேசத்தில் இடம் பெற்ற ஊழல் தொட ர்பில் மூன்று மணித்தியாலங்கள் காத்தி ருந்து அவரிடம் தெளிவுபடுத்தினேன். ஆனால் அவருடைய காலத்தில் எவ்வித மான விசாரணைகளோ நடவடிக்கைகளோ இடம்பெறவில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ இவரை வட மாகாண ஆளுநராக நியமித்த நிலையில் தனது ஜனாதிபதி பதவிக்காலம் முடியும் முன்னரே அவரது பதவியை பறித் தார். அவரது பதவியை பறித்ததற்கு அவர் மீது இருந்த பல்வேறு ஊழல் முறைகேடுகள் காரணமாக அமைந்தது.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தான் நிய மித்த ஆளுநரை பதவி நீக்கிய நிலையில் தற் போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஆளுநராக பதவி வழங்கியமை பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துகிறது.

ஆகவே ஊழல் முறைகேடுகளுடன் தொடர்பு இல்லாத மக்களின் தேவைகளை நிறை வேற்றக்கூடிய தகுதியான ஆளுநர் ஒருவரை ஜனாதிபதி நியமிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.




CREATIVE DESIGNER
every design has a story
Logos | Flyers | Banners |
Name Boards | Brochures |
Catalogue | Magazines |
News Papers | Product Packaging |
Social Media Ads | Badges |
Menu | Posters | Vouchers
+94 77 3828 594

தேசியம்
www.thesiyamnews.com THESIYAM

# தமிழினப் படுகொலையை அங்கீகரிக்க டயஸ்போறாவின் நடவடிக்கை போதாது!

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்



2009 முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் சிங்கள பேரினவாத அரசாங்கத்தால் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட தமிழினப் படுகொலையை உலகின் முதன்மையான நாடுகள் அங்கீகரிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் புலம் பெயர் தமிழர் அமைப்புக்களினால் முன் நகர்த்தப்பட்டாலும் அது போதுமானதாக இல்லை இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி நீர்த்துப் போகின்ற அபாயம் கூர்மையடைகிறது.

தாயக புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஒரே நிலைப்பாட்டில் சர்வதேச நீதிப் பொறிமுறை வேண்டும் என்ற கோரிக்கையில் உறுதியாக இருந்தாலும் அது கைகூட பூகோள நலன் சார்பு நாடுகள் சாதகமாக பச்சை விளக்கை காட்டவில்லை இதுவும் கால இழுத்தடிப்புக்கு வாய்ப்பாகி விடும்.

சர்வதேச நீதிப் பொறிமுறைக்கு குரல் கொடுக்கும் சம நேரம் தமிழினப் படுகொலையை அங்கீகரிக்கும் மிகப் பிரதானமான ராஜதந்திர நகர்வை புலம்பெயர் தேசத்தில் உள்ள அத்தனை அமைப்புக்களும் தத்தமது நாடுகளின் உயர் ராஜதந்திர தரப்புக்கள் ஊடாக விரைந்து கையாள வேண்டும் இதுவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதற்கான கதவுகளை திறக்கும் அதன் ஊடாகவே உறுதியான பரிகார நீதி மற்றும் இன நல்லிணக்கம் ஏற்படும்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள அனைவரும் தாம் வாழும் நாடுகளில் ஒரே காலத்தில் சரியான முன் நகர்வை மேற் கொண்டால் தமிழினப் படுகொலைக்கான அங்கீகாரம் கிடைக்கும் அதுவே அரசியல் தீர்வுக்கான இறுதி வழியாகவும் அமையும்.

# மன்னாரில் பாடசாலை மாணவி மாயம்! பெற்றோர் விடுத்துள்ள கோரிக்கை



மன்னார்-முசலி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பண்டாரவெளி, மணற்குளம் என்ற முகவரியில் வசிக்கும் மாணவியொருவர் காணாமல் போயுள்ளதாக அவரின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

ரிகாஷா (வயது- 15) என்ற மாணவியே நேற்று முன்தினம் (18.05.2023) காலையில் இருந்து காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவி பண்டாரவெளி முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்று வருவதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

மாணவி காணாமல் போனது தொடர்பாக நேற்று தேடிய பெற்றோர் மாணவி பற்றிய தகவல்கள் கிடைக்காததை தொடர்ந்து சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில் நேற்றையதினம் (19.05.2023) சிலாவத்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதாக மாணவியின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த மாணவி பற்றிய தகவல்கள் தெரிந்தவர்கள் 074-2614 797 எனும் மாணவியின் தந்தையின் தொலைபேசிக்கு தகவல்களை தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.




# யாழ்ப்பாணப் பெட்டகம் – நிழலுருக் கலைக்கூடம் உலக பண்பாட்டுத் தினத்தினை முன்னிட்டு முப்பெருந் தமிழ் விழா!




யாழ்ப்பாணப் பெட்டகம் - நிழலுருக் கலைக்கூடம் உலக பண்பாட்டுத் தினத்தினை முன்னிட்டு முப்பெருந் தமிழ் விழாவை நடாத்தவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (21) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் பிற்பகல் 2.30மணிக்கு யாழ் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் முப்பெருந்தமிழ் விழா இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அ.சிவபாலசுந்தரன், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் தலைவர் முனைவர் க.சுபாஷினி ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர், தி. ஜோன் குயின்ரஸ், வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பொறுப்பாளர்களான முனைவர் மு.இறைவாணி, முனைவர் மு.பாமா உள்ளிட்டோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன் போது கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் சேவைகள் செய்த பலருக்கும் விருதுகள் வழங்கி வைக்கப்படவுள்ளது.

இது தொடர்பிலான ஊடக சந்திப்பு யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்றபோது நிகழ்வு தொடர்பான விடயங்கள் யாழ்ப்பாணப் பெட்டகம் - நிழலுருக் கலைக்கூடம் அமைப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

# கிளிநொச்சியில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் மக்கள் விசனம்



கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டிக்குளம் கல்லாற்றுப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளவதனால் அப்பகுதி கடுமையாக பாதிக்கப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் தெரிவித்துள்ளதாவது, பறவைகள் சரணாலயப் பகுதியிலுள்ள கண்டல் காடுகள் அழிக்கப்பட்டு கடலின் நீர்மட்டத்தை விட அதிக ஆழத்தில் குழிகள் தோண்டப்படுவதினால் சுண்டிக்குளம் கடல் நீர் குடியிருப்புக்குள் அபாய நிலையை எதிர்கொண்டுள்ளது.

அத்துடன் தற்பொழுது இரவு பகல் பாராமல் தொடர்ச்சியாக இடம்பெறும் மணல் அகழ்வினால் பாதைகள் குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் கல்லாற்று- சுண்டிகுளம் பகுதி வரை செல்லும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த வீதி பாதிப்படைந்துள்ள நிலையில் நோயாளர் காவு வண்டி கூட பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலை தொடருமாயின் அப்பகுதி மக்கள் வெளியேற வேண்டிய அச்சநிலை எற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

# முள்ளிவாய்க்கால் இனபடுகொலை: கனேடிய பிரதமரின் அறிக்கைக்கு இலங்கை கடும் கண்டனம்



இலங்கையில் கடந்த 14 ஆண்டுகளுக்கு முன்பு முடிவுக்கு வந்த ஆயுதப் போரின் போது ஏற்பட்ட துயர்நிறைந்த உயிரிழப்புக்கள் குறித்து, கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்ட அறிக்கை தொடர்பில் இலங்கை அரசாங்கம் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

"உள்நாட்டில் நல்லிணக்கச் செயற்பாட்டிற்கு உதவாது எனக் கருதும் கனேடிய பிரதமரின் அறிக்கையை கண்டிப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேற்றுமுன்தினம் (18.05.2023) கடந்த 14 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் தமிழர் இனப்படுகொலை நினைவு தினம் மற்றும் யுத்தம் நிறைவடைந்த தினத்தை நினைவுகூரும் வகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.
அதில், முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட்ட சம்பவங்களில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் உயிரிழந்து, மேலும் பலர் காணாமல் ஆக்கப்பட்டார்கள், காயமடைந்தார்கள் அல்லது இடம்பெயர்க்கப்பட்டார்கள்.

அர்த்தமற்ற இந்த வன்முறையால் ஏற்பட்ட வேதனையுடன் வாழும் போரால் பாதிக்கப்பட்டவர்கள், தப்பிப் பிழைத்தோர் மற்றும் அவர்களது அன்புக்குரியோர் ஆகியோரை நாம் நேற்றைய தினம் நினைவில் கொள்கின்றோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளார்.

கனேடிய பிரதமர் ஜஸ்டின் வெளியிட்ட அறிக்கை தொடர்பில் இலங்கை அரசாங்கம் மீண்டும் கனடாவுடன் இராஜதந்திரப் போரில் இறங்கியுள்ளதாக கூறப்படுகின்றது. இந்த நிலையில், கனேடிய பிரதமரின் அறிக்கை தொடர்பில் இலங்கை அரசாங்கம் மீண்டும் கனடாவுடனான இராஜதந்திரப் போரில் இறங்கியுள்ளதாக கூறப்படுகின்றது.